தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் அணையிலிருந்து 9,000 கன அடி நீர் திறப்பு

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு புதன்கிழமை காலை முதல் நொடிக்கு 9 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடுவது கடந்த மாதம் 27-ஆம் தேதி முதல் நிறுத்தப்பட்டது. இந்த நிலையில், தற்போது, காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் மழை பெய்வது குறைந்ததால், புதன்கிழமை காலை முதல் மேட்டூர் அணையிலிருந்து நொடிக்கு 9 ஆயிரம் கன அடி வீதம் டெல்டா பாசனத்துக்கு மீண்டும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதையடுத்து, அணையின் நீர்மட்டம் 105.30 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 5,167 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையின் நீர் இருப்பு 71.88 டி.எம்.சி.யாக இருந்தது. டெல்டா பாசனத்துக்கு அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படுவதால், நீர் மின் நிலையங்களில் மீண்டும் மின் உற்பத்தி தொடங்கியது.

### கோவை பகுதியில் பறவைக் காய்ச்சல் பீதி: கால்நடைத் துறை அதிகாரிகள் ஆய்வு



கோவை பகுதியில் பறவைக் காய்ச்சல் பீதி நிலவி வருகிறது. பெரிய நாயக்கன்பாளையத்தையடுத்த காளிபாளையத்தில் உள்ள தனியார் கோழிப்

பண்ணையில் 40 கோழிகள் இறந்ததையடுத்து, அதற்கான காரணம் குறித்து கால்நடைத் துறை உயரதிகாரிகள் சம்பந்தப்பட்ட பண்ணையில் புதன்கிழமை கள ஆய்வு மேற்கொண்டனர். காளிபாளையம் கிராமத்தில் அன்புச்செல்வன் என்பவருக்குச் சொந்தமான பண்ணையில் புதன்கிழமை 40 கோழிகள் இறந்தன. இந்தக் கோழிகள் பறவைக் காய்ச்சல் தாக்குதலால் இறந்துபோயிருக்குமோ என்ற சந்தேகம் எழுந்தது. இந்த நிலையில், அரசு உத்தரவின் பேரில், மண்டல கால்நடை இணை இயக்குநர் (பொறுப்பு) பெருமாள்சாமி, துணை இயக்குநர் பழனிசாமி, கோவில்பாளையம், வெள்ளமடை கால்நடை மருத்துவனை மருத்துவர்கள் மெய்நாதன், வித்யா மனோகரி, உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் சென்று கோழிகளின் ரத்த மாதிரிகளை ஆய்வு செய்தனர். முதல்கட்டச் சோதனையில், கோழிகள் வயிற்றுக் கழிச்சல் நோயால் தாக்கப்பட்டது தெரியவந்தது. இருப்பினும், இதன் மாதிரிகள் ஈரோட்டில் உள்ள கால்நடை மருத்துவப் பரிசோதனை ஆய்வு மையத்தில் செய்ய உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பறவைக் காய்ச்சல் நோய் எங்கும் பரவவில்லை. ஆகவே, விவசாயிகள் பீதி அடையத் தேவையில்லை என அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர்.

## <u>முல்லைப் பெரியாறு அணை விவகாரம்: கேரளத்தின் மறுஆய்வு மனு தள்ளுபடி</u>



முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்த அனுமதி அளித்து கடந்த மே மாதம் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை மறு ஆய்வு செய்யக் கோரி, கேரள அரசு தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் புதன்கிழமை தள்ளுபடி செய்தது. இது தொடர்பாக தலைமை நீதிபதி எச்.எல். தத்து, நீதிபதிகள் ஜே. செலமேஸ்வர்,

மதன் பி. லோகுர், எம்.ஒய். இக்பால், சி. நாகப்பன் ஆகியோர் அடங்கிய அரசியல் சாசன அமர்வு கேரள அரசின் மனுவை செவ்வாய்க்கிழமை பரிசீலித்தது. மறுஆய்வு மனு என்பதால் தலைமை நீதிபதி அறையில் வைத்து இந்த மனுவை விசாரிப்பதா, வேண்டாமா என்று நீதிபதிகள் பரிசீலித்தனர். இதனால், மனு தாக்கல் செய்த கேரள அரசு, பிரதிவாதியாக சேர்க்கப்பட்டிருந்த தமிழக அரசு ஆகியவற்றின் வழக்குரைஞர்களும் நீதிபதிகளின் அறைக்குள் அனுமதிக்கப்படவில்லை. இந்நிலையில், அரசியல் சாசன அமர்வு கேரளத்தின் மனு மீதான உத்தரவு குறித்து உச்ச நீதிமன்றப் பதிவாளரிடம் செவ்வாய்க்கிழமை மாலையில் தெரிவித்தது. இதைத் தொடர்ந்து, புதன்கிழமை மாலையில் கேரளத்தின் மனு மீதான உத்தரவு வெளியிடப்பட்டது. அதில், "மறுஆய்வு மனுவில் கேரள அரசு விடுத்த கோரிக்கைகள், அத்துடன் இணைக்கப்பட்ட ஆதாரங்கள் போன்றவற்றைப் பார்வையிட்டோம். இந்த விவகாரத்தில் முன்பு (மே 7, 2014) பிறப்பித்த உத்தரவில் எந்த மாற்றமும் செய்ய வேண்டிய முகாந்திரம் எழவில்லை. எனவே, இந்த மனுவைத் தள்ளுபடி செய்கிறோம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**பின்னணி**: முல்லைப் பெரியாறு அணையை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்த 2006ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த உத்தரவை அமல்படுத்த மறுத்த கேரள அரசு, மாநில சட்டப் பேரவையில் "அணை பாதுகாப்புச் சட்டம்' ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றியது. மேலும், உச்ச நீதிமன்ற உத்தரவை எதிர்த்து வழக்குத் தொடுத்தது. இந்த வழக்கு விசாரணையின்போது, "நூற்றாண்டு பழைமை வாய்ந்த முல்லைப் பெரியாறு அணை பலவீனமாக உள்ளதாகவும், இந்த அணையை இடித்துவிட்டு புதிய அணை கட்ட வேண்டும். இந்த அணையை சொந்தம் கொண்டாட தமிழகத்துக்கு உரிமை இல்லை' என்ற பல்வேறு புதிய

வாதங்களை கேரளம் முன்வைத்தது. இதையடுத்து, முல்லைப் பெரியாறு அணையின் ஸ்திரத்தன்மை குறித்து ஆய்வு செய்ய உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் தலைமையில் அதிகாரமளிக்கப்பட்ட குழுவை உச்ச நீதிமன்றம் நியமித்தது. இந்தக் குழு விரிவான ஆய்வை நடத்தி, முல்லைப் பெரியாறு அணை வலுவாக உள்ளது என்று அறிவியல் பூர்வ ஆதாரங்களுடன் கூறியது. இதன் அடிப்படையில், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தலாம் என்று உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு கடந்த மே 7-ஆம் தேதி தீர்ப்பு அளித்தது. இதை எதிர்த்து கடந்த ஜூன் மாதம் கேரள அரசு மறுஆய்வு மனுவைத் தாக்கல் செய்திருந்தது. அதில், "1886-ஆம் ஆண்டு சென்னை மாகாணம்- திருவாங்கூர் சமஸ்தானம் இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் செல்லாது; அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்தலாம் என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு, நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் தலைமையிலான அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஆனந்த் குழு தவறான மதிப்பீடுகளின்படி இந்த விவகாரத்தை ஆய்வு செய்துள்ளது. இந்த மறுஆய்வு மனுவை நீதிபதிகளின் அறையில் அல்லாமல் நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

## அவிநாசியில் வேளாண் இடுபொருள்கள் வழங்கும் விழா

வேளாண்மைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு வேளாண் இடு பொருள்கள் வழங்கும் விழா அவிநாசி வட்டாட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது . விழாவிற்கு, வேளாண்மை உதவி இயக்குநர் ஈ.சிவக்குமார் தலைமை வகித்தார். சமூக நலத்துறை தனி வட்டாட்சியர் தேவமனோகரன், துணை வட்டாட்சியர் ரவிச்சந்திரன், ஏ.சி.எம்.எஸ். கூட்டுறவு சங்கத் தலைவர் மு.சுப்பிரமணியம், ஜெயலலிதா பேரவை பேரூராட்சி செயலாளர் ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண் அலுவலர் விமலா,

அக்மா தொழில் நுட்ப மேலாளர் தேவி ஆகியோர் விளக்கவுரையாற்றினர். அவிநாசி சட்டப் பேரவை உறுப்பினர் ஏ.ஏ.கருப்பசாமி, விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய இடுபொருள்களை வழங்கினார். இதில், துவரை ஏக்கர் நடவுக்காக ரூ. 10 லட்சத்து 27 ஆயிரம் மதிப்பில் 137 பேருக்கும், துவரை வரப்பு நடவுக்காக ரூ. 16 ஆயிரம் மதிப்பில் 21 பேருக்கும் துவரை விதை, பூச்சிக் கொல்லி மருந்து உள்ளிட்ட இடு பொருள்கள் வழங்கப்பட்டன.

## நவீன கரும்பு சாகுபடி: தண்ணீர் குறைவு-மகசூல் அதிகம்



**காஞ்சிபுரம்:** குறைந்த அளவு விதை நாற்று, குறைந்த அளவு தண்ணீரை உபயோகித்து அதிக மகசூல் தரும் நீடித்த, நவீன கரும்பு சாகுபடி முறையை வேளாண் துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இதுகுறித்து காஞ்சிபுரம் மாவட்டம் காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் (உழவியல்) பெ. முருகன் கூறிய தகவல்கள்: **முக்கிய அம்சங்கள்:** ஒரு விதைப்பரு சீவல்களிலிருந்து நாற்றங்கால் தயாரித்தல் வேண்டும். இளம் (25 முதல் 30 நாள்) நாற்றுகளை எடுத்து நடவு செய்ய வேண்டும். வரிசைக்கு வரிசை 5 அடி, நாற்றுக்கு நாற்று 2 அடி இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். சொட்டு நீர்ப்பாசனத்தின் மூலம் உரமிடுதல், ஊடு பயிரிட்டு மண் வளம், மகசூல் அதிகரிக்க வழி செய்ய வேண்டும். இயற்கை சார்ந்த உரங்கள், பயிர் பாதுகாப்பு, பராமரிப்பு முறைகளுக்கு போதிய அளவு முக்கியத்துவம் அளித்தல் வேண்டும். நாற்றுகள் தயார் செய்யத் தேவையானப் பொருட்கள்: 5000 ஒரு விதைப்பரு சீவல்கள், 100 குழித்தட்டுகள் (ஒவ்வொன்றிலும் 50 குழிகள்) 150 கிலோ

கோகோபிட். ஒரு விதைப்பரு சீவல்களை தெரிவு செய்தல்: ஆரோக்கியமான 7 முதல் 9 மாதங்களான கரும்பிலிருந்து, கணுக்களுக்கிடையே 7 முதல் 8 அங்குலம் இடைவெளியுள்ள விதைப் பருக்களை தேர்வு செய்ய வேண்டும். நோய் தாக்கிய, பழுதடைந்த விதைப் பருக்களை தவிர்ப்பது அவசியம். தேவையான அளவு கரும்பை வெட்டி எடுத்துக் கொள்ளவும், வெட்டப்பட்ட கரும்பிலிருந்து ஒரு விதைப்பரு சீவல்களை வெட்டுக்கருவி கொண்டு வெட்டி எடுக்கவும்.

**சீரான நாற்றுகளைப் பெற**

வழிமுறைகள்: விதைப்பரு சீவல்களை வெட்டி எடுத்தவுடன், அவற்றில் சிலவற்றை 1 சதவீத சுண்ணாம்புக் கரைசலில் நனைத்து ஈரமான ஒரு சாக்குப்பையில் 3 முதல் 4 நாட்களுக்கு மூடி வைக்க வேண்டும். 4-வது நாளின் இறுதியில் சாக்குப்பையை திறந்து அவற்றில் நன்கு முளைவிட்ட ஆரோக்கியமான விதைப் பருக்களை தேர்வு செய்யவும். ப்ளாஸ்டிக் ட்ரேக்களில் முளைவிடாது போன விதைப்பருக்களுக்கு பதிலாக இந்த ஆரோக்கியமான பருக்களை எடுத்து வைக்கலாம். இந்த முறை மூலம் தரமான நாற்றுகளை பெறுவதும், சீரான வளர்ச்சியும் சாத்திய மாகிறது. **நாற்று தயார் செய்தல்:** 6 மாதம் வயதுள்ள உயர் விளைச்சல் தரும் ரகங்களிலிருந்து மொட்டுகளை சேகரிக்க வேண்டும். அதில் 5,000 மொட்டுகளை (ஒரு விதைப்பரு சீவல்கள்) எடுத்து டிரைக்கோடெர்மா விரிடி (1 லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம்) கலந்த தண்ணீரில் 15 நிமிடம் ஊறவைத்து பின் நிழலில் 15 நிமிடம் உலர வைக்க வேண்டும். பின்னர் இந்த மொட்டுகளை கோணிப்பையில் இறுகக் கட்டி நிழலில் 5 நாட்கள் அப்படியே வைக்க வேண்டும். பிறகு குழித்தட்டுகளில் பாதியளவு கோகோ பீட் எரு கொண்டு நிரப்பி அதில் விதை மொட்டுகள் மேல் நோக்கி இருக்குமாறு சற்று சாய்வாக அடுக்கி மீதி குழிகளை கோகோபீட் கொண்டு நிரப்ப வேண்டும்.

நிழல் வலை அல்லது மர நிழலில் வைத்து 25 முதல் 30 நாள்கள் வரை நீர் தெளிக்க வேண்டும். **நிலம் தயார் செய்தல்:** பயிர்க் கழிவுகளை நீக்கியவுடன் நிலத்தில் உள்ள மண் கட்டிகளை உடைக்க வேண்டும். டிராக்டர் உதவியுடன் ஆழமாக ஒன்று அல்லது இரண்டு உழவுகள் (30 செ.மீ.க்கு மேல்) செய்ய வேண்டும். பின்பு சமன் செய்யும் கருவி கொண்டு நிலத்தை சமப்படுத்த வேண்டும். இயற்கை உரங்களான தொழுஉரம் ஏக்கருக்கு 8 டன் முதல் 10 டன்கள் அளிப்பதோடு அதனுடன் ட்ரைகோடெர்மா அல்லது சூடோமோனாஸ் நுண்ணுயிரிகளை ஏக்கருக்கு ஒரு கிலோ கலந்து இடவேண்டும். பார்களை 5 அடி இடைவெளியில் அமைக்க வேண்டும். **நாற்று நடவு செய்தல்**: 25 முதல் 30 நாள்கள் வயதுடைய நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். நடவுக்கு ஒரு நாள் முன்பு நாற்றுகளுக்கு நீர் கொடுப்பதை நிறுத்த வேண்டும். இப்படி செய்வதால் நாற்றுகளை எளிதாக எடுக்கலாம். நாற்றுக்கு நாற்று 2 அடி இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். மண்ணின் ஈரப்பதத்தை பொருட்டு நீர் பாய்ச்ச வேண்டும். அதே போல் நடவுக்குப் பின்பும் ஒரு முறை நீர்ப் பாய்ச்ச வேண்டும். 15-க்கும் மேற்பட்ட தூர்கள் 2 மாதத்திற்குள் உருவாகும். 2 அல்லது 3 தூர்கள் வந்தவுடன் முதலில் வந்த தாய்ச்செடியை வெட்டி நீக்க வேண்டும். அவ்வாறு நீக்கினால் அதிக பக்க தூர்கள் வெளிவரும். **மண் அணைத்தல், சோகை உரித்தல்**: நடவு செய்த 45-வது நாள் மற்றும் 90-வது நாளில் மண் அணைப்பு செய்தல் வேண்டும். ஒளிச்சேர்க்கைக்கு, மேற்புறமுள்ள 8 முதல் 10 இலைகளே தேவைப்படுகின்றன. எனவே, கீழ்ப்புறமுள்ள காய்ந்த, சில காயாத இலைகளை 5-வது, 7வது மாதத்தில் உரித்து பார் இடைவெளிகளில் இட வேண்டும். வேலையாட்கள் கொண்டோ, கருவிகள் மூலமாகவோ நடவுக்குப் பின் 30, 60, 90-வது நாள்களில் களை எடுக்க வேண்டும். **மூடாக்கு:** மூடாக்கு போடுவதன் மூலம் மண்ணிலுள்ள களைகள் கட்டுப்படுவதுடன்

மண்ணுக்குத் தேவையான ஈரப்பதம் கிடைக்கிறது. கரும்பு சோகைகள் ஏக்கருக்கு 1.5 டன் அளவு நடவுக்கு 3 நாள்களுக்கு பின் பரப்பி விட வேண்டும். அதே போல், சோகை உரித்த பின் அவைகளை பார் இடைவெளிகளில் பரப்பி விடவேண்டும். **நீர் மேலாண்மை:** கரும்பு பயிருக்கு அதன் மொத்த வளர்ச்சிப் பருவத்தில் ஏக்கருக்கு 60 லட்சம் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. சொட்டு நீர்ப்பாசனம் மூலம் 90 சதவீதம் வரை நீர் உபயோகிப்புத் திறனை அதிகரித்து 40 முதல் 70 சதவீதம் வரை நீரை சேமிக்க முடியும். நடவுக்குப் பின் மண்ணின் தன்மையைப் பொறுத்தும் பயிரின் வயதைப் பொறுத்தும், மழை மற்றும் ஈரப்பதத்தை பொறுத்தும் நீர்ப் பாய்ச்ச வேண்டும். கிளை விடும் பருவத்தில் (36 முதல் 100 நாள்கள்) 10 நாள்களுக்கு ஒரு முறையும், அதிக வளர்ச்சி பருவத்தில் (101 முதல் 270 நாள்கள்) 7 நாள்களுக்கு ஒரு முறையும், முதிர்ச்சிப் பருவத்தில் (271 நாள் முதல் அறுவடை வரை) 15 நாள்களுக்கு ஒரு முறையும் நீர்ப் பாய்ச்ச வேண்டும். **சொட்டு நீர்ப்பாசனம்:** நீடித்த நவீன கரும்பு சாகுபடியின் மகசூல் அதிகரிக்க சொட்டு நீர் உரப் பாசனம் சாலச் சிறந்தது. 3 நாள்களுக்கு ஒரு முறை சொட்டு நீர்ப் பாசனம் செய்ய வேண்டும். 10 நாள்களுக்கு ஒரு முறை உரப் பாசனம் செய்ய வேண்டும். இம்முறையில் 45 சதவீதம் பாசன நீரை (1,200 மி.மீ.) சேமிக்க முடியும். **இயற்கை உரம் அளித்தல்:** நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறை இயற்கை முறையில் உரம் அளித்தலை அதிகரிக்கிறது. இதன் மூலம் மண்ணுக்குத் தேவையான முக்கியமான சத்துக்கள் கிடைப்பதோடு, மண்ணின் உயிர்த்தன்மையும் கெடாமல் பாதுகாக்கப்படுகிறது. இயற்கை உரங்களான தொழு உரம் அல்லது மக்கிய உரம் அல்லது மக்கிய ப்ரஸ் மட் ஆகியவற்றை ஏக்கருக்கு 8 முதல் 10 டன் என்ற அளவிற்கு கொடுப்பது நல்லது. தழைச்சத்து ஒரு ஏக்கருக்கு 112 கிலோ கிடைக்கும் அளவிற்கு சரிபார்த்து மேற்கண்ட உரங்களை இடுவது

நல்லது. இயற்கை உரங்களோடு ட்ரைகோடெர்மா அல்லது சூடோ மோனாஸ் நுண்ணுயிரிகளை ஏக்கருக்கு 1 கிலோ அளவில் கலந்து கொடுப்பது மிகவும் நல்லது. **ஊடுபயிர்:** நீடித்த நவீன கரும்பு சாகுபடியில் அதிக இடைவெளி இருப்பதால் ஊடுபயிராக காய்கறிகள், பயறு வகைகள், வெள்ளரி, தர்ப்பூசணி, பசுந்தாள் உரப் பயிர்களை சாகுபடி செய்ய முடிகிறது. ஊடுபயிர் செய்வதால் அதிக லாபம், களைக் கட்டுப்பாடு, மண்வளத்தைப் பெருக்க முடியும். **மகசூல்:** மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து தொழில் நுட்பங்களையும் சரியாகக் கடைப்பிடித்தால் ஒரு மொட்டிலிருந்து குறைந்தது 30 கிலோ கரும்பு கிடைக்க வாய்ப்பு உள்ளது. ஒரு ஏக்கருக்கு 5 ஆயிரம் மொட்டுக்கள் எனக் கணக்கிடும் போது 150 டன்கள் வரை மகசூல் பெறவாய்ப்புஉள்ளது.

**புகையானை விரட்டி பயிரைப் பாதுகாப்பது எப்படி?**



அதிகளவில் சேதத்தை ஏற்படுத்தும் புகையான் பூச்சி நோய்த் தாக்குதலில் இருந்து நெல்பயிரைப் பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்து நெல் ஆராய்ச்சி நிலையம் யோசனை கூறியுள்ளது. இதுகுறித்து திரூர் நெல் ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் சுமதி கூறியது: **சேதத்தின் அறிகுறிகள்**: பூச்சிகள் தூர்களின் அடிபாகத்தில் இருந்து கொண்டு சாற்றை உறிஞ்சுவதால் பயிர் மஞ்சள் நிறமாக மாறும். பின்னர் பழுப்பு நிறமாக மாறும். இது தத்துப்பூச்சி எரிப்பு எனப்படும். பாதிக்கப்பட்ட வயல் ஆங்காங்கே வட்ட வட்டமாகப் புகைந்தது போல் காணப்படும்.

**பாதுகாப்பு மேலாண்மை முறைகள்:** நடவு வயலில் 8 அடிக்கு ஒரு அடி இடைவெளி விட்டு பத்தி நடவு செய்ய வேண்டும். மண் பரிசோதனை பரிந்துரைபடி தழைச்சத்து இடும்போது 3 அல்லது 4-ஆவது முறையாகப் பிரித்து இடவேண்டும். களைச் செடிகளை முழுமையாக அகற்ற வேண்டும். புகையான் தாக்குதலுக்கு எதிர்ப்புத் திறன், தாங்கும் திறன் கொண்ட ரகங்களான ஏடிடீ 36, ஏடிடீ 37, கோ 42, பிஒய் 3 ஆகிய ரகங்களைப் பயிரிடலாம். விளக்குப் பொறி அமைத்து தாய்ப் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணித்து அழிக்கலாம். மஞ்சள் நிற ஒட்டுப் பொறிகளை ஹெக்டேருக்கு 12 என்ற அளவில் அமைக்கலாம். வயலில் புகையானின் இயற்கை விரோதிகளான சிலந்தி, பச்சை மிரிட் நாவாய்ப் பூச்சி, புள்ளி வண்டு, தட்டான், ஊசித் தட்டான் போன்ற இரை விழுங்கிகளும், அனேக்ரஸ், ஒலிகோசிட்டா போன்ற முட்டை ஒட்டுண்ணிகளும் இந்தப் பூச்சியைப் பெரும் அளவில் கட்டுப்படுத்துகின்றன. மேலும் வேப்ப எண்ணெய் 3 சதவீதமும், பொருளாதார சேத நிலையை எட்டியவுடன் கீழ்க்கண்ட பூச்சிக் கொல்லிகளுள் ஏதேனும் ஒன்றை ஒரு ஹெக்டேருக்குத் தெளிக்க வேண்டும். மேலும் இமிடாகுளோபிலிட் 17.8 எஸ்.எல். - 100 மில்லி லிட்டர், பயூப்ரோபெசின் 25 எஸ்.சி. 800 மில்லி லிட்டர், டைகுளோர்வாஸ் 76 எஸ்.சி. 625 மில்லி லிட்டர், அசிப்பேட் 76 எஸ்.பி. 625 கி டிரைஅசோபாஸ் 40 இசி 652 மில்லி லிட்டர் அளவு தெளிக்க வேண்டும். புகையானின் மறு உற்பத்தியைப் பெருக்கும் மிதைல் பாரத்தியான், செயற்கை பைரித்ராய்டு மருந்துகளைத் தெளிக்கக் கூடாது.

## 19 இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவண்ணாமலை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம், இம் மாதம் 19 ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெறுகிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காலை 10 மணிக்கு நடைபெறும் இக் கூட்டத்துக்கு ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகிக்கிறார். கூட்டத்தில் அனைத்து அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டு விவசாயிகளின் கோரிக்கைகளுக்குப் பதில் அளிக்கின்றனர். எனவே, மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் அனைவரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளைத் தெரிவித்துப் பயன்பெறலாம். இதுதவிர, தங்கள் கோரிக்கைகளை மனுக்களாக இம் மாதம் 12 ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கலாம் என்றும் ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார். மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்டத்தின் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், அனைத்து வேளாண் துறை அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்பப் பெட்டிகளிலும் விவசாயிகள் தங்களது கோரிக்கை மனுக்களை அளிக்கலாம். இம் மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு குறைதீர் கூட்டத்தின்போது விவசாயிகளுக்கு பதில் அளிக்கப்படும் என்று ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்தார்.

## அரசுக்கு விவசாய சங்கத்தினர் பாராட்டு

தமிழக அரசு 110 விதியின் கீழ் வேளாண்மைத் துறைக்கு ரூ.984 கோடி நிதி ஒதுக்கி, 2013-2014-ல் உணவு தானிய உற்பத்தியில் 120.03 லட்சம் டன் உற்பத்தி செய்து சாதனை செய்தது. மேலும் சுகாதாரம், கல்வி போன்ற துறைகளில் ஒருமித்த வளர்ச்சியில் இந்திய அளவில் சிறந்த மாநிலமாக

தேர்வு செய்யப்பட்டு தமிழக அரசைப் பாராட்டி இந்தியா டுடே குழுமம் முதல் பரிசு வழங்கி கெப்ரவித்தது. இதற்கு நன்றி தெரிவித்தும், முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை பாராட்டியும் தமிழ்நாடு விவசாயி சங்கத்தின் சார்பில் கலசப்பாக்கம் வேளாண்மைத் துறை அலுவலகம் முன்பாக மாவட்டத் தலைவர் வி.ஜி.புருஷோத்தமன் தலைமையில் பட்டாசு வெடித்தும், பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர்.

# தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வேளாண் விரிவாக்க மையத்தில் இடு பொருட்கள் வழங்கல்**

அவலூர்பேட்டை: மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர்பேட்டை துணை வேளாண் விரிவாக்க மையத்தில் தோட்டக் கலை சார்பில் இடு பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் வீராசாமி தலைமை தாங்கி விவ சாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கி பேசினார். தோட்டக்கலை உதவி இயக்குனர் அன்பழகன் முன்னிலை வகித்தார். தரிசு நிலங்களில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் வகையில் கலத்தம்பட்டு, ஆத்திப்பட்டு கிராமங்களை சேர்ந்த ஏழு விவசாயிகளுக்கு 47 ஆயிரம் ரூபாய் மதிப்பில் காய்கறி விதைகள் வழங்கினர். விவசாய சங்க பிரதிநிதி ரவி, உதவி வேளாண் அலுவலர்கள் மணிகண்டன், நடராசன், வெங்கட்ராமன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்ய அறிவுரை**

அவலூர்பேட்டை: விவசாயிகளின் வாழ்க்கை தரம் உயர தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்திட முன் வரவேண்டும் என தோட்டக்கலை துணை இயக்குனர் பேசினார். மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர்பேட்டை

துணை வேளாண் விரிவாக்க மையத்தில் தோட்டக் கலை சார்பில் இடு பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் வீராசாமி தலைமை தாங்கி பேசியதாவது: அதிக மகசூல் மற்றும் நிறைந்த வருமானம் பெற விவசாயிகள் தோட்டக்கலை பயிர்களை அதிக அளவில் சாகுபடி செய்ய வேண்டும். காய்கறிகள், மலர்கள், பழ மரங்கள் போன்ற பயிர்களை உரிய தொழில் நுட்பங்களை கடைபிடித்து சாகுபடி செய்வதன் மூலம் விவசாயிகளின் வருவாய் உயரவும் அவர்களது வாழ்க்கை தரம் உயரவும் வாய்ப்புகள் உள்ளது. தேசிய நுண்ணீர் பாசன திட்டத்தில் தோட்டக்கலை பயிர்களுக்கு சொட்டு நீர் பாசன முறையை கடை பிடிப்பது நல்ல பலன் தரும். இந்த முறையினால் பாசன நீர் சிக்கனம், உர சிக்கனம், களை கட்டுப்பாடு, கூலி ஆட்கள் குறைவு மற்றும் அதிக மகசூல் கிடைக்கின்றன. இது போன்ற முறையில் விவசாயிகள் கடைபிடித்து அதிக வருவாய் ஈட்ட முன்வரவேண்டும் என அவர் பேசினார்.

## <u>மரவள்ளி கிழங்கு உற்பத்தியாளர் கூட்டம்</u>

ராசிபுரம் : நாமகிரிப்பேட்டையில், மரவள்ளி கிழங்கு உற்பத்தியாளர்கள் சங்க ஆலோசனை கூட்டம் நடந்தது. விழுப்புரம் மாவட்ட தலைவர் கோபாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். நாமக்கல் மாவட்ட விவசாயிகள், 60 சதவீதம் பேர் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்கின்றனர். ஆனால், டன் ஒன்றுக்கு 2,500 ரூபாய் மட்டுமே வழங்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு, மாற்றுப்பயிர்கள் சாகுபடி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தமிழக அரசு உடனடியாக தலையிட்டு, மரவள்ளிக்கிழங்கு டன் ஒன்றுக்கு, குறைந்தபட்சம் 10 ஆயிரம் ரூபாய் வழங்கவேண்டும். கடலூர் மாவட்டத்தில் மூடப்பட்ட, மரவள்ளியால் தயாரிக்கப்படும் குளுக்கோஸ் ஆலையை திறக்க வேண்டும். மரவள்ளி உற்பத்தியாளர்களை பங்குதாரராக கொண்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும்,

குளுக்கோஸ் ஆலை திறக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**<u>தக்காளி வரத்து அடியோடு குறைந்தது விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

தர்மபுரி: தக்காளி விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில், நெல், கரும்பு, மா, மஞ்சள், மரவள்ளி கிழங்கு, பருத்தி, தக்காளி மற்றும் சிறுதானிய பயிர்களான ராகில சாமை, சோளம் உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு, மாரண்டஹள்ளி, காரிமங்கலம், அரூர் உள்ளிட்ட பகுதிகளில். தக்காளி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில், 20 ஆயிரம் ஏக்கரில் தக்காளி சாகுபடி செய்யப் படுகிறது. இங்கு உற்பத்தியாகும் தக்காளி பாலக்கோடு, தர்மபுரி தக்காளி சந்தைகள் மூலம், தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. பாலக்கோடு தக்காளி சந்தையில் இருந்து, தென் மாவட்டங்களான திண்டுக்கல், வத்தலகுண்டு, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கேரளா உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் அதிகளவில் தக்காளியை வாங்கி செல்கின்றனர். இரு மாதங்களுக்கு முன், தக்காளி உற்பத்தி அதிகரித்ததால், தக்காளி வரத்து அதிகரித்தது. 15 கிலோ எடை கொண்ட, ஒரு தக்காளி பெட்டி, 100 ரூபாய்க்கும் குறைவாக விற்பனையானது. இதனால், தக்காளி விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இந்நிலையில், மாவட்டத்தில் தற்போது தக்காளி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால், சந்தைக்கு தக்காளி வரத்து குறைந்துள்ளது. மேலும், தற்போது நடந்து வரும் முகூர்த்த சீஸன் மற்றும் ஐயப்பன் கோவில் சீஸனால் தக்காளி விற்பனை அதிகரித்து வருகிறது.

இதனால், சில தினங்களாக தக்காளி விலை படிப்படியாக உயர்ந்து வந்தது. இதனால் தக்காளி சாகுபடி செய்திருந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். பாலக்கோடு தக்காளி மார்க்கெட்டில் நேற்று, 15 கிலோ எடை கொண்ட, ஒரு தக்காளி பெட்டி, 270 ரூபாய் முதல், 320 ரூபாய் வரை விற்பனை யானது. தர்மபுரி மற்றும் ஒட்டப்பட்டி உழவர் சந்தைகளில், ஒரு கிலோ தக்காளி, 24 ரூபாய்க்கும், வெளி மார்க்கெட்டில், ஒரு கிலோ தக்காளி, 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

## <u>தடப்பள்ளி பாசனப்பகுதியில் விதை நெல் விற்பனை தீவிரம்</u>

கோபி : கோபி பகுதியில், இந்தாண்டு வடகிழக்கு பருவமழை வழக்கத்தை விட, 75 மி.மீ., அதிகமாக பெய்துள்ளதால், நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது. விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்ட கோபியில், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை, கடந்த, இரண்டாண்டுகளாக போதிய மழையின்றி, கடும் வறட்சி ஏற்பட்டது. இதனால், நிலத்தடி நீர்மட்டம், 1,000 அடிக்கு கீழே சரிந்தது.இந்நிலையில், தென்மேற்கு பருவமழை தீவிரம் காரணமாக, நீலகிரியில் பெய்த மழையால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, அணையில் இருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு, முதல்போக சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. அக்டோபரில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்தது. கோபி பகுதியில் அக்டோபர் மாதம் முடிய இயல்பு மழை, 644.6 மி.மீ., பதிவாகி உள்ளது. நடப்பாண்டு அக்டோபர் மாதத்துக்கு மட்டும், கோபி பகுதியில், 261.5 மி.மீ., மழை பதிவானது. 2014 ஜனவரி முதல் நடப்பாண்டு நவம்பர் வரை, 755 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது.இதுசராசரி, மழையை விட, இந்தாண்டு கோபி பகுதியில், 75 மி.மீட்டர் அதிகமாக பெய்துள்ளது. இதனால், குண்டேரிப்பள்ளம் உள்ளிட்ட குளம், குட்டைகளுக்கு நீர்வரத்து

அதிகரித்து, நிலத்தடி நீர்மட்டம் அதிகரித்துள்ளது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 86 அடி உள்ள நிலையில், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு, தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதுபற்றி கோபி வேளாண்துறை உதவி இயக்குனர் வாசுதேவன் கூறுகையில், நடப்பாண்டு, பருவமழை அதிகம் பெய்ததால், கோபி பகுதியில், 1,650 ஹெக்டரில் கடலை சாகுபடி செய்யப்பட்டது.தற்போது, தடப்பள்ளி அரக்கன்கோட்டை, இரண்டாம் பாசனத்துக்கான விதை நெல், வேளாண் துறை மூலம் விற்பனை செய்யப்படுகிறது, என்றார்.

**<u>3வது நாளாக 2,640 டன் யூரியா திருச்சிக்கு ரயில் மூலம் வருகை</u>**

திருச்சி: திருச்சி உள்ளிட்ட, நான்கு மாவட்ட விவசாயிகளுக்கு விநியோகிக்க, கடந்த, 30ம் தேதி, 2,600 டன் யூரியா, டிசம்பர், 2ம் தேதி, 2,600 டன் பொட்டாஷ் உரங்கள் வந்தது. நேற்று காலை, இரண்டு ரயில்கள் மூலமாக, 2,640 டன் யூரியா உரம் திருச்சிக்கு வந்துள்ளது. திருச்சி மாவட்டத்தில், ஆண்டு சராசரி மழையளவு 762 மி.மீ., நடப்பாண்டு நவம்பர் மாதம் வரை, 505.85 மி.மீ., மழை பெய்துள்ளது. கடந்தாண்டு திருச்சி மாவட்டத்தில், 3.77 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டது. நடப்பாண்டு, 5.55 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. குறுவை பருவத்தில், நெல், 8,107 ஏக்கரிலும், சம்ப பாருவத்தில், 87,250 ஏக்கரிலும், டெல்டா இல்லாத பகுதிகளில், 62,750 ஏக்கரில் நெல் சாகுபடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, டெல்டா பாசன பகுதியில், 88,197 ஏக்கரிலும், டெல்டா இல்லாத பகுதியில், 24,545 ஏக்கரில் நெல் நடவு பணிகள் முடிந்துள்ளது. திருச்சி, கரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர் மாவட்டத்தில் நெல் பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு விநியோகிக்க, வெளிமாநிலத்தில் இருந்து யூரியா,

பொட்டாஷ் ஆகியவை, கடந்த மூன்று நாட்களாக, ரயில் மூலம் திருசிக்கு வந்தது. கடந்த, 30ம் தேதி, ஆந்திரா மாநிலம், விசாகப்பட்டிணத்தில் இருந்து, தனியார் உர விற்பனையாளர்களுக்காக, 2.600 டன் யூரியா வந்தது. நேற்று முன்தினம், ஆந்திர மாநிலம் கிருஷ்ணபட்டினத்தில் இருந்து, கூட்டுறவு சங்கங்களின் மூலம் விற்பனை செய்ய, 2,600 டன் பொட்டாஷ் வந்தது. நேற்று காலை, ஆந்திரா மாநிலம், கிருஷ்ணபட்டிணத்தில் இருந்து, கிரிகோ (கே.எஃப்.சி.,) இருந்து, 1,320 டன் யூரியாவும், மதியம் காரைக்கால் கோரமண்டல் (சி.எஃப்.எல்.,) இருந்து, 1,320 டன் யூரியாவும், ரயில் மூலம், திருச்சி குட்ஷெட்டுக்கு வந்தது. இந்த உரங்கள், லாரிகள் மூலமாக, திருச்சி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூரில் உள்ள தனியார் குடோன்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. வெளிமாநிலங்களில் இருந்து, நேற்று வரை, 7,840 டன் யூரியா மற்றும் பொட்டாஷ் வந்துள்ளது.

## நாட்டுக்கோழி வளர்ப்பு: பயிற்சி முகாம் துவக்கம்

திண்டுக்கல் : நாட்டுக்கோழி வளர்ப்பு தொடர்பான பயிற்சி வகுப்புகள் திண்டுக்கல் கால்நடை பல்கலை ஆராய்ச்சி நிலையத்தில் துவங்கியது. கால்நடைத்துறை உதவி இயக்குனர்கள் டாக்டர் ராமசாமி, டாக்டர் ராஜேந்திரன், டாக்டர் ஹக்கீம், திண்டுக்கல் கால்நடை மருத்துவ பல்கலை ஆராய்ச்சி நிலைய தலைவர் பீர்முகமது, உதவி பேராசிரியர் விஜயகுமார் பங்கேற்றனர். பழநி, கொடைக்கானல், நிலக்கோட்டை, திண்டுக்கல், சாணார்பட்டி, வேடசந்தூர் விவசாயிகள் பங்கேற்றனர்.ஆராய்ச்சி நிலைய தலைவர் பீர்முகமது கூறுகையில்,"அனைத்து பருவ காலங்களிலும் நாட்டுக்கோழியை பராமரிப்பது குறித்தும், மானியம் குறித்த பயனீட்டாளர்களின் சந்தேகம் குறித்தும் பயிற்சி வகுப்பில் விளக்கம் அளிக்கப்படும்," என்றார்.

## பழநி பாலாறு-பொருந்தலாறு அணை தண்ணீர் திறப்பு

பழநி : பழநி பாலாறு-பொருந்தலாறு அணையிலிருந்து 10 கிராமப்புற விவசாய பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. பழநி பாலாறு-பொருந்தலாறு அணையிலிருந்து சண்முகநதி ஆற்று பாசனத்திற் காக வினாடிக்கு 150 கனஅடி தண்ணீரும், தாடாகுளம் கால்வாய் பாசனத்திற்காக வினாடிக்கு 25 கனஅடி தண்ணீரும் திறந்து விடப் பட்டுள்ளது. இதன்மூலம் பாலசமுத்திரம், கரிக்காரன்புதூர், தாமரைக் குளம், வண்டிவாய்க்கால், பெரியகலையம்புத்தூர், கோதை மங்கலம், மானூர், நரிக்கல்பட்டி, கல்துரை வரையிலான 10 கிராம விவசாயிகள் பயன் பெறுவர். பொதுபணித்துறையினர் கூறுகையில், "பாலாறு-பொருந்தலாறு அணையிலிருந்து விவசாயத்திற்காக நேற்றுமுதல் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நேற்றைய நீர்மட்டம் 63 அடியாக (மொத்தம் 65) உள்ளது. வினாடிக்கு 36 கனஅடி தண்ணீர் வரத்துள்ளது. சண்முநதி வழியாக விவசாயபாசனத்திற்கு மாதத்தில் 5 நாட்களும், தாடாகுளம் கால்வாயில் 135 நாட்களும் தொடர்ந்து விவசாய பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இதன் மூலம் 10 க்கு மேற்பட்ட கிராமங்களிலுள்ள பலஏக்கர் பரப்பளவிலான விவசாயிகள் பயன்பெறுவார்கள்,' என்றனர்.

## விதை கிராம திட்டம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

வேடசந்தூர் : வேடசந்தூர் வட்டார வேளாண்துறை சார்பில் பயறு வகை பயிர்களில் கூடுதல் மகசூல் பெறுவது குறித்த பயிற்சி முகாம் வெள்ளைய கவுண்டனூரில் நடந்தது. ஊராட்சி தலைவர் செல்வராணி தலைமை வகித்தார். வேளாண்மை இணை இயக்குனர் சம்பத்குமார் முன்னிலை வகித்தார். வேளாண் உதவி இயக்குநர் சுருளியப்பன் வரவேற்றார். குறுகிய

கால பயிர்கள் சாகுபடி செய்வது, கூடுதல் உற்பத்தி பெறுதல் குறித்து விளக்கப்பட்டது.விவசாயிகள் தங்களுக்கு தேவையான விதை தானியங்களை உற்பத்தி பொருட்களில் தரம் பிரித்து எடுப்பது குறித்து விளக்கப்பட்டது. வேளாண் துணை இயக்குனர்கள் தங்கச்சாமி, பாஸ்கரன் பங்கேற்றனர்.

## தேனியில் பால் உற்பத்தி 20 சதவீதம் அதிகரிப்பு! மழையால் தீவன தட்டுப்பாடு நீங்கியதால்

தேனி : தேனி மாவட்டத்தில் பெய்த தொடர் மழையால், தீவன தட்டுப்பாடு நீங்கி பால் உற்பத்தி 20 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. தேனி மாவட்டத்தில் ஒரு லட்சத்து 37 ஆயிரத்து 665 பசுமாடுகள், 6,397 எருமை மாடுகள், ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 256 செம்மறி ஆடுகள், ஒரு லட்சத்து ஆயிரத்து 965 வெள்ளாடுகள், 12 லட்சத்து 58 ஆயிரத்து 883 நாட்டுக்கோழிகள், 690 கழுதைகள், 1016 வாத்துக்களும் உள்ளன.கடந்த மூன்று ஆண்டுகளாகவே மாவட்டத்தில் போதமான அளவு மழை பெய்யவில்லை. இதனால் வனங்களும்,விளை நிலங்களும் வறண்டு கிடந்தன.கடந்த 2012ம் ஆண்டு மொத்தம் சராசரி மழையில் 30 சதவீதம் மட்டுமே பெய்தது.ஆர்வம்: 2013ம் ஆண்டிலும் வறட்சி தொடர்ந்தது. இந்நிலையில் நடப்பு ஆண்டு போதுமான அளவு மழை பெய்துள்ளது. ஆண்டிபட்டி ஒன்றியம் தவிர மற்ற அனைத்து நீர் நிலைகளிலும் தண்ணீர் காணப்படுகிறது. காடுகள், வயல்கள், தோட்டங்கள் என எல்லாமே பசுமையாக உள்ளன. தரிசு நிலங்களில் புல் வளர்ந்துள்ளது.இதனால் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு பசுந்தீவன தட்டுப்பாடு நீங்கியுள்ளது. கால்நடை தீவனங்களும் தாராளமாக கிடைக்கின்றன. விவசாயிகள் கால்நடை வளர்ப்பில் ஆர்வமாக உள்ளனர். அதிகரிப்பு:கால்நடைகளுக்கு தேவையான தண்ணீரும் கிடைக்கிறது. உணவு மற்றும் குடிநீர் தட்டுப்பாடு

நீங்கி உள்ளது. இதனால் பால் உற்பத்தி அதிகரித்து வருகிறது. தற்போதைய நிலையில் எல்லா மாடுகளிலும் 20 சதவீதத்திற்கு மேல் பால் உற்பத்தி அதிகரித்து உள்ளது. மாவட்டத்தில் சராசரி பால் உற்பத்தி திறன் ஆவினுக்கு மட்டும் ஒரு லட்சம் லிட்டரை எட்டி உள்ளது. தனியார் மூன்று லட்சம் லிட்டர் வரை பால் கொள்முதல் செய்கின்றனர்.பால் மாடுகளையும், இதர கால்நடைகளையும் வளர்ப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆறு மாதங்களுக்கு முன்னர் 30 ஆயிரம் ரூபாய்க்கு விற்ற நல்ல தரமான பால் மாடு தற்போது விலை அதிகரித்து 45 ஆயிரத்திற்கு விற்கப்படுகிறது. மொத்தத்தில் நான்கு ஆண்டுகளுக்கு பின்னர் பெய்த மழை விவசாயிகளுக்கு ஓரளவு நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது.

## நெல்லில் இலை சுருட்டுப்புழுக்கள் கட்டுப்படுத்த ஆலோசனை

பெரியகுளம் : பெரியகுளம் பகுதியில் நெல்லில் பச்சையத்தை சுரண்டும் இலைசுருட்டுப் புழுக்களை கட்டுப்படுத்த வேளாண்மைத்துறை ஆலோசனை வழங்கியுள்ளது. பெரியகுளம் பகுதிகளில் நெல் ரகங்களான ஆடுதுறை 39, 45 மற்றும் நெல்லூர் ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. பெரியகுளம், வடுகபட்டி, ஜெயமங்கலம், சிந்துவம்பட்டி, தேவதானப்பட்டி, சாத்தாகோவில்பட்டி, குள்ளப்புரம் ஆகிய பகுதியில் ஆயிரத்து 100 எக்டர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது நிலவும் ஈரப்பதமான தட்பவெப்பநிலையால் ஜெயமங்கலம் மற்றும் சிந்துவம்பட்டி கிராமங்களில் நெல் ரகங்களில் இலைசுருட்டு புழுவின் தாக்குதல் உள்ளது. அறிகுறிகள்: இலை சுருட்டுப்புழு பயிர் நிலைகளில் இலைகளை சுரண்டி சாப்பிடும். புழுக்கள் பச்சை நிறத்தில் காணப்படும். நெற்பயிரின் இலைகளை சுருட்டி மற்றும் மக்கி அதனுள் புழுக்கள் இருக்கும். பச்சையத்தை சுரண்டு சாப்பிடுவதால் இலைகள் வெள்ளை நிறமாக மாறி, காய்ந்து விடும். கட்டுப்படுத்தும் முறை: தலைச்சத்து அடங்கிய உரங்களை இடுவதை

தற்சமயம் தவிர்க்க வேண்டும்.3 மி.லி., குளோரிபைரிபாஸ் மருந்தினை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து காலை, மாலை வேளைகளில் தெளிக்க வேண்டும்.இவ்வாறு செய்வதினால் இலை சுருட்டுப்புழுவை கட்டுப்படுத்தலாம் என வேளாண்மை உதவி இயக்குனர் பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

## கரும்பு விளைச்சல் "அமோகம்' : சிவகங்கை விவசாயிகள் மகிழ்ச்சி

சிவகங்கை: சிவகங்கை மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டை விட, நடப்பாண்டு கரும்பு விளைச்சல் அமோகமாக உள்ளதால் விவசாயிகள் இந்தாண்டு பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாட தயாராகி வருகின்றனர். இம்மாவட்டத்தை பொறுத்தவரை பெரும்பாலான விவசாயிகள் கிணற்று பாசனத்தை நம்பி விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். சிவகங்கை- மேலூர் ரோட்டில் பாப்பாகுடி, பெருமாள்பட்டி, கொழுஞ்சிபட்டி, சிவல்பட்டி, மலம்பட்டி, சானிப்பட்டி, கீழ-மேலச்சாலூர் உள்ளிட்ட கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் கரும்பு விவசாயம் நடக்கிறது. கடந்த 2 ஆண்டுகளாக பருவ மழை பொய்ப்பால் இப்பகுதியில் உள்ள விவசாய கிணறுகள் தண்ணீரின்றி வறண்டன.விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இருப்பினும், மனம் தளராமல் கரும்பு நட்ட விவசாயிகளுக்கு சமீபத்தில் பெய்த மழையால் ஓரளவிற்கு கிணறு மற்றும் நீர் பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. இந்த தண்ணீரை தேவையான நேரத்திற்கு பாய்ச்சி, கரும்பு சாகுபடிக்கு விவசாயிகள் புத்துணர்வு கொடுத்தனர். தற்போதே அறுவடைக்கு தயாராக உள்ளதால் நடப்பாண்டு நல்ல விலையை இப்பகுதியை விவசாயிகள் எதிர்பார்த்து காத்துள்ளனர். விவசாயி லட்சுமணன், மேலச்சாலூர்: மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக மழை பெய்யாததால் கிணற்று நீர் வற்றியது. நடப்பாண்டு மழையை நம்பி கரும்பு சாகுபடி செய்தேன். சமீபத்தில் பெய்த மழையில் கிணற்றின் நீர்

மட்டம் அதிகரித்தது. இதனால், கரும்பு விவசாயம் நல்ல விளைச்சலை எட்டியுள்ளது. பொங்கலையொட்டி அறுவடை செய்வேன். உழவு, உரம், தோகை பறிப்பு,வேலையாட்களுக்கு கூலிச் செலவு போக, ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும், என்றார்.

## 5250 எக்டேரில் கும்ப்பபூ சாகுபடி

நாகர்கோவில் : கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த ஒரு மாத காலமாக தொடர்ந்து பெய்து மழை காரணமாக பெரும்பாலான குளங்கள் நிரம்பி விட்டது. அனைத்து அணைகளும் 90 சதவீதம் நிரம்பி விட்டது. மாவட்டத்தின் முக்கிய அணையான பேச்சிப்பாறை அணையின் முழு கொள்ளவு 48 அடி. நேற்றைய நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 45.88 அடியாக இருந்தது. அணைக்கு 252 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. மழை பலமாக பெய்ததால் மாவட்டம் முழுவதும் கும்பப்பூ சாகுபடி பணி வேகமாக நடைபெற்று வருகிறது. மொத்தம் 5250 எக்டேர் நிலத்தில் சாகுபடி பணிகள் நடைபெற்றுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ஆண்டுதோறும் ரூ.13,600 கோடிக்கு வீணாகும் காய்கறி, பழங்கள்

புதுடெல்லி: இந்தியா முழுவதும் ஆண்டுதோறும் சுமார் 13,600 கோடி ரூபாய் மதிப்பிலான காய்கறி மற்றும் பழங்கள் வீணாகி குப்பையில் வீசப்படுகிறது. இந்த தகவலை இங்கிலாந்து நிறுவனம் ஒன்று நடத்திய ஆய்வில் தெரிவந்துள்ளது. சாகுபடியாகும் காய்கறிகள், பழங்களை நீண்ட

நாட்களுக்கு கெடாமல் பாதுகாத்து வைப்பதற்கான குளிர்சாதன வசதியுள்ள கிடங்குகள் அதிகம் இல்லாததுதான் இந்த இழப்புக்கு முக்கிய காரணமாகும். விவசாயிகள் சாகுபடி செய்யும் காய்கறிகள், பழங்களை பாதுகாக்க முடியாமல் பாதி அளவிற்கு மேல் அழுகிவிடுகிறது. இதை கருத்தில் கொண்டு அதிகளவு குளிர்சாதன வசதியுடன் கூடிய கிடங்குகளை இந்தியா அமைக்க வேண்டும். இப்படி செய்தால் விவசாயிகளுக்கு வருமானம் கூடுதலாக கிடைக்கும். நாட்டின் பொருளாதாரமும் வளரும் என்று அந்த ஆய்வறிக்கையில் சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

## <u>வரத்து அதிகரிப்பால் காய்கறி விலை சரிவு</u>

மதுரை, : வரத்து அதிகரித்துள்ளதால் கிலோ ரூ.80க்கு விற்று வந்த கொத்தமல்லி ரூ.25 ஆக விலை சரிந்தது. இதேபோல் மற்ற காய்கறிகளின் விலையும் சரிந்துள்ளது. மதுரை மாட்டுத்தாவணி சென்ட்ரல் மார்க்கெட்டில் காய்கறிகளின் நேற்றைய விலை நிலவரம் (ரூபாய், கிலோவில். அடைப்புக்குள் பழைய விலை):கத்தரிக்காய் - ரூ.25 (ரூ.30), அதலைக்காய் - ரூ.25, பச்சைப்பட்டாணி ரூ.100 (ரூ.150), மொச்சை ரூ.40, தக்காளி (உருட்டு)- ரூ.15, தக்காளி (நாடு) ரூ.18, வெண்டைக்காய் - ரூ.20 (ரூ.15), பீர்க்கங்காய் - ரூ.20, புடலங்காய்-ரூ.20, பெரிய பாகற்காய்- ரூ.20, சுரைக்காய்-ரூ.15 (ரூ.10), வெள்ளை பூசணி-ரூ.6, சர்க்கரை பூசணி-ரூ.5, கொத்தவரங்காய்-ரூ.10, அவரைக்காய்-ரூ.30, மிளகாய் (நாடு)-ரூ.25, உருண்டை மிளகாய் ரூ.25, மிளகாய் (ஆந்திரா) ரூ.20, குடை மிளகாய்-ரூ.40, பஜ்ஜி மிளகாய்- ரூ.50, முள்ளங்கி-ரூ.25, முருங்கைக்காய்-ரூ.50, கொத்தமல்லி-ரூ.25 (ரூ.80), புதினா (ஒரு கட்டு)-ரூ.15, கருவேப்பிலை-ரூ.20 (ரூ.25), சேனைக்கிழங்கு-ரூ.20 (ரூ.25), சேம்பு-ரூ.30 (ரூ.35), கருணைக்கிழங்கு-ரூ.40, பல்லாரி (பழையது) - ரூ.20, முதல் ரூ.24, சின்ன வெங்காயம் (புதியது) - ரூ.25 முதல் 40, சின்ன வெங்காயம் (பழையது) -

ரூ.45, உருளைக்கிழங்கு (கொடைக்கானல்)-ரூ.30 (ரூ.35), கேரட்-ரூ.25, பீட்ரூட்-ரூ.25, பீன்ஸ்-ரூ.35, பட்டர் பீன்ஸ்-ரூ.80, சோயா பீன்ஸ்-ரூ.50, முட்டைக்கோஸ்-ரூ.15, காலி பிளவர்-ரூ.15 முதல் ரூ.20, நூக்கல்-ரூ.30, டர்னிப்-ரூ.25, சவ்சவ்-ரூ.15, இஞ்சி (புதியது)- ரூ.40 (ரூ.50).சென்ட்ரல் மார்க்கெட் அனைத்து வியாபாரிகள் சங்க தலைவர் ரவிச்சந்திரன் கூறுகையில், “கொத்தமல்லி முன்பு ஓசூரில் இருந்து வந்தது. இதனால் கிலோ ரூ.80க்கு விற்றது. தற்போது தேனி, சின்னமனூர், தேவாரம் போன்ற பகுதிகளில் இருந்து கொத்தமல்லி அதிகமாக வரத் துவங்கி உள்ளது. இதனால் கொத்தமல்லி விலை கிலோ ரூ.80ல் இருந்து ரூ.25 ஆக விலை குறைந்துள்ளது. இனி வரும் காலங்களிலும் கொத்தமல்லி விலை கணிசமாக குறையும் என்றார்.

**<u>காட்டுமன்னார்கோவில் பகுதியில் பன்னீர் கரும்பு விற்பனை தொடங்கியது</u>**

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் பகுதியில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கரும்பு விற்பனை தொடங்கி உள்ளது. பொங்கல் பண்டிகை என்றால் பன்னீர் கரும்பு மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. பண்டிகை காலங்களில் இங்கு பயிரிடப்படும் கரும்பை பல்வேறு மாநிலங்கள், மாவட்டங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மொத்த வியாபாரிகள் கரும்பு பயிரிடப்பட்ட பகுதிக்கு சென்று மொத்தமாக வாங்கி லாரிகளில் ஏற்றிச் செல்வர். பண்டிகை தொடங்க ஒரு மாத காலத்திற்கு மேல் இருக்கும் நிலையில் இந்த பகுதியில் கரும்பு விற்பனை தொடங்கி உள்ளது. முதல் கட்டமாக சேத்தியாத்தோப்பு அருகே உள்ள வாழைக்கொல்லையில் இருந்து சிறு வியாபாரிகள் விற்பனைக்காக கரும்புகளை வெட்டி எடுத்து வருகின்றனர். இந்த ஆண்டு ஒரு கரும்பின் விலை ரூ.10க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டை விட கரும்பு சாகுபடி செய்யும் பரப்பு குறைந்துள்ளதால் பண்டிகை நெருங்கும் காலங்களில் மேலும் அதிகரிக்கும் என கூறப்படுகிறது.

## அடிப்படை பயிற்சி முகாமில் வங்கி கணக்கு துவங்கிட விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

திருச்செங்கோடு,: திருச்செங்கோடு அருகே பாலமேடு மொரங்கம் உழவர் மன்றங்களின் அடிப் படை பயிற்சி துவக்க விழா நடந்தது. நிகழ்ச்சிக்கு சென்னை ரிசர்வ் வங்கியின் உதவி பொதுமேலாளர் சுந்த ரேசன் தலைமை வகித் தார். கொசவம்பாளையம் சமூக வளர்ச்சி நிறுவன இயக்குனர் ராஜேந்திரன் வரவேற்றார். நாமக்கல் மாவட்ட நபார்டு வங்கியின் உதவி பொதுமேலாளர் பூவ ராகன் உழவர் மன்றத்தின் நோக்கம், புதிய தொழில்நுட்பம், பயன்பாடு, வங் கியோடு உள்ள தொ டர்பு, கடன் பெறும் முறை, திரும்ப செலுத்தும் முறை, மானியங்கள் பற்றி விளக்கிக் கூறினார். நாட்டுக்கோழி வளர் ப்பு, கறவை மாடு வளர்ப்பு போன்ற வேளாண் திட்டங்கள் குறித்தும் அவர் பேசினார். மண் பரிசோ தனை செய் தல், உழவர் அட்டை பெறு தல், வேளாண் தொழில் நுட்பங்களை அறிதல் குறித்து மல்லசமுத்திரம் வேளாண் உதவி இயக்குனர் அசோக்குமார் எடுத்துக்கூறினார். நாமக்கல் மாவட்ட முன் னோடி வங்கியின் மேலாளர் சந்திரசேகர் சுய வேலைவாய்ப்புத்திட்டம் பற்றி விளக்கி அனைவரும் வங்கிக் கணக் கை துவக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நிகழ்ச்சியில் மலலசமுத்திரம் பல்லவன் வங்கியின் அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர். பாலமேடு உழவர் மன்ற தலைவர் மனோகரன் நன்றி கூறினார்.

## கீழ்பவானி வாய்க்காலில் நன்செய் பாசனத்துக்கு கூடுதலாக 15 நாட்கள் தண்ணீர்

ஈரோடு, : பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் நன்செய் பாசனத்துக்கு ஆகஸ்ட் 15 முதல் டிசம்பர் 15ம் தேதி வரையும், புன்செய் பாசனத்துக்கு ஜனவரி முதல் வாரத்தில் இருந்து ஏப்ரல் 30ம் தேதி வரையிலும் ஆண்டுதோறும் முதலாம் மற்றும் இரண்டாம் மண்டல

பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. சுழற்சி முறையில் சுமார் 2 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. இந்த ஆண்டு நன்செய் பாசனத்துக்குட்பட்ட இரண்டாம் மண்டலத்திற்கு ஆகஸ்ட் 15ம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில் வாய்க்கால் நீர் கடைமடைக்கு தாமதமாகவே சென்றடைந்தது. எனவே, கடைமடை பகுதியில் பாசன பணிகள் தாமதமாக துவங்கப்பட்டதால் டிசம்பர் 30ம் தேதி வரை கூடுதலாக 15 நாட்களுக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து கீழ்பவானி பாசன விவசாயிகள் கூறியதாவது: கீழ்பவானி வாய்க்காலில் தொடர்ந்து நீர்கசிவு அதிகமாக உள்ளதால் கடைமடை பகுதிகளான எழுமாத்தூர், விளக்கேத்தி, குலவிளக்கு, சிவகிரி போன்ற பகுதிகளுக்கு தாமதமாகவே தண்ணீர் சென்றடைந்தது. இதன் காரணமாக நடவு பணிகள் தாமதமாக துவங்கியது. எனவே இந்த மாதம் 15ம் தேதிக்கு பதிலாக மேலும் கூடுதலாக 15 நாட்களுக்கு அதாவது 30ம் தேதி வரையிலும் தண்ணீர் திறக்க வேண்டும். விவசாயிகள் சார்பில் விடுக்கப்பட்ட இக்கோரிக்கையை பொதுப்பணித்துறையினரும் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளனர். அதேசமயம் முதலாம் மண்டலத்துக்குட்பட்ட புன்செய் பாசனப்பகுதிகளுக்கு ஜனவரி 10ம் தேதிக்கு பிறகு தண்ணீர் திறந்து விடப்படும் என என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு பருவமழை பரவலாக பெய்துள்ளதால் புன்செய் பாசனப்பகுதியில் கார்த்திகை பட்டத்திற்கான நிலக்கடலை சாகுபடி பணியை இப்போதே விவசாயிகள் துவங்கி விட்டனர். பெரும்பாலான விவசாயிகள் மானாவாரி சாகுபடியில் ஈடுபட ஆர்வம் கொண்டுள்ளதால் முன்கூட்டியே தண்ணீர் திறப்பு தேதியை அறிவிக்க வேண்டும் என்றனர்.

**<u>வடக்கு உழவர் சந்தையில் ரூ.4.39 கோடி காய்கறிகள் விற்பனை</u>**

அனுப்பர்பாளையம், : திருப்பூர் வடக்கு உழவர் சந்தைக்கு, காளிபாளையம், குன்னத்தூர், பெருமாநல்லூர், அவினாசி, தெக்கலூர், கருவலூர் ஆகிய

பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது விளை பொருட்களான காய்கறிகளை தினமும் கொண்டு வந்து விற்று வருகின்றனர். இந்த சந்தையில் நாள் ஒன்றுக்கு, சராசரியாக 53.6 டன் காய்கறிகள் விற்பனையாகும். நவம்பர் மாதத்தில் மொத்தம் 1619 டன் காய்கறிகள் வந்திருந்தன. நாள் ஒன்றுக்கு ரூ.14.6 லட்சம் வீதம் மொத்தம் ரூ.4.39 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது. இங்கு நவம்பர் மாதம் 4925 விவசாயிகள் காய்கறிகளைக் கொண்டு வந்து விற்று, பயனடைந்து வந்துள்ளனர். ஒரு நாளைக்கு, 6852 நுகர்வோர் வீதம், நவம்பர் மாதம் மட்டும் 2 லட்சத்து 8 ஆயிரத்து 560 பேர் வடக்கு உழவர் சந்தைக்கு காலையிலும் மாலையிலும் வந்து ஏராளமான காய்கறிகளை வாங்கி பயனடைந்துள்ளனர். இது தொடர்பாக, திருப்பூர் வடக்கு உழவர் சந்தை நிர்வாக அலுவலர் ராதாகிருஷ்ணன் கூறுகையில், ‘தொடர் மழையின் காரணமாக பூக்கின்ற பூக்கள் காய்க்காமல் கீழே விழுகின்றன. செடிகளுக்கு அடிக்கும் மருந்துகளும் பனிமழையினால் பலனளிப்பதில்லை. இதனால், கத்தரிக்காய், தக்காளி ஆகியவற்றில் காய்ப்புழுவினால், அழுகல், சொத்தை விழுகிறது. சென்ற மாதத்தை விட வரத்து குறைந்து காய்கறிகளின் விலை அதிகரித்து உள்ளது. கடந்த நவம்பர் மாதம் 143 விவசாயிகள் ரூ.1.27 லட்சம் மதிப்புள்ள 5.6 டன் காய்கறிகளை, திருப்பூர் வடக்கு உழவர் சந்தை குளிர் பதன கிடங்கில் பாதுகாப்பாக வைத்திருந்தனர்’ என்றார்.

## <u>கிராமத்தில் பட்டறை நிறுவி விவசாய கருவி தயாரிப்பு</u>

உடுமலை, : உடுமலை அருகே உள்ள எரிசனம்பட்டி பஸ் நிறுத்தம் அருகே திடீரென இரும்பு பட்டறை தோன்றி உள்ளது. அதில் விவசாயப் பணிகளுக்குத் தேவையான மண்வெட்டி, கோடரி, கடப்பாரை உள்ளிட்ட கருவிகள் தயார் செய்யப்படுகின்றன. மத்திய பிரதேச மாநிலம் நரசிங்காபுரத்தை சேர்ந்த 2 குடும்பத்தினர் பிழைப்புக்காக வந்த இடத்தில்

இப்படி பட்டறை போட்டு விவசாய கருவிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர். இவர்கள் உடுமலை, பொள்ளாச்சி பகுதிகளில் இருந்து இரும்பை விலைக்கு வாங்கி வந்து விவசாய கருவிகளை செய்து தருகின்றனர். கிலோ ரூ.80க்கு விற்கிறார்கள்.இப்பகுதி விவசாயிகள் ஆர்வமுடன் இவற்றை வாங்கி செல்கின்றனர். விலை நியாயமாகவும், கருவிகள் தரமானதாகவும் இருப்பதாக சொல்கின்றனர்.

**புதுகைக்கு நேற்று சரக்கு ரயிலில் வந்த 1,324 டன் உரம்**

புதுக்கோட்டை, : 1,324 டன் உரம் நேற்று சரக்கு ரயில் மூலம் புதுகைக்கு வந்தது. புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதை தொடர்ந்து கடந்த ஒரு மாதகாலமாக நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் விவசாயிகள் தங்களது சம்பா சாகுபடி பணிகளை தொடங்கியுள்ளனர். விவசாயிகளுக்கு தேவையான யூரியா கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு விவசாயிகளிடமிருந்து மாவட்ட நிர்வாகத்திற்கு வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழக அரசு உத்தரவுபடி நேற்று காலை 1,006 டன் யூரியா மற்றும் 318 டன் பொட்டாஷ் உரங்கள் சரக்கு ரயில் மூலம் புதுக்கோட்டை ரயில் நிலையத்திற்கு வந்தது. புதுக் கோட்டை மாவட்டத்திற்கு 400 டன் யூரியாவும் 100 டன் பொட்டாஷ் ஆகியவையும், மீதமுள்ளவை சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களுக்கு லாரிகள் மூலம் கொண்டு செல்லப்படுகிறது.கடந்த சில தினங்களுக்கு முன்பு சீன உரங்கள் காரைக்காலிற்கு வந்தது. அந்த உரத்திலிருந்துதான் தற்போது புதுக்கோட்டைக்கு உரமூட்டைகள் வந்துள்ளன. ரயில் மூலம் வந்த 1,006 டன் யூரியாவில் 400 டன் யூரியா புதுக்கோட்டை மாவட்ட தேவைக்காக வேளாண் கூட்டுறவு மையங்களுக்கு லாரிகள் மூலம் அனுப்பப்பட்டது. லாரிகளில் ஏற்றப்பட்ட யூரியா மூட்டைகளை கலெக்டர் கணேஷ் ஆய்வு செய்தார். இதன் பின்னர்

கலெக்டர் கணேஷ் நிருபர்களிடம் கூறியதாவது, மாவட்டத்திற்கு 6 ஆயிரம் டன் உரத்தேவை உள்ளது. ஏற்கனவே 4 ஆயிரம் டன் உரம் தமிழக அரசால் வழங்கப்பட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டது. நேற்று முன்தினம் திருச்சியிலிருந்து 400 டன்னும் நேற்று சரக்கு ரயில் மூலம் 400 டன்னும் உரம் வந்துள்ளது. இவைகள் வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் தனி யார் கடைகள் மூலமாகும் விற்பனை செய்யப்படுகிறது. மீதமுள்ள 1,200 டன் உரம் ஓரிரு நாளில் புதுக்கோட்டைக்கு வந்து சேரும் அதன் பிறகு மாவட்டத்தில் உரத்தட்டுப்பாடு இருக்காது என்றார். இந்த ஆய்வின்போது புதுக்கோட்டை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஷாஜகான் உள்பட பலர் உடனிருந்தனர்.

## <u>வானம் மேகமூட்டத்தால் நெற்பயிரில் நோய் பரவ வாய்ப்பு கட்டுப்படுத்த வேளாண்துறை ஆலோசனை</u>

திருவாடானை, : கடந்த பல நாட்களாக வானம் மேகமூட்டத்து டன் காணப்படுவதால், நெற்பயிரில் நோய் தாக்கு தல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்துவது குறித்து வேளாண் துறை ஆலோ சனை வழங்கியுள்ளது.இதுகுறித்து திருவா டானை வேளாண்துறை உதவி இயக்குனர் நாகரா ஜன் விடுத்துள்ள அறிக்கை: திருவாடானை வட்டாரத்தில் தற்போது 25 ஆயிரம் ஹெக்டேருக்கும் மேலான நிலப்பரப்பில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக வானம் மேகமூட்டமாக இருப்பதால் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. குறிப்பாக குருத்துப்பூச்சி தாக்குதல் ஏற்படலாம். இதேபோல் இலைசுருட்டுப்புழு தாக்குதலின் அறிகுறியாக இலை நீளவாக்கில் சுருண்டு உள்ளே புழுக்கள் காணப்படும்.இந்நோயை கட்டுப்படுத்த குளோரி பைரிபாஸ் 20-சிசி 500 மில்லியும், புரோபனோபாஸ் 50-இசி 400 மில்லியும், புப்ரோபெசின் 25-சிசி 200 மில்லி அளவில் ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். குலை

நோய் தீவிர தாக்குதலின்போது பயிர் முழுவதும் எரிந்தது போன்ற தோற்றமளிக்கும். குலை நோயை கட்டுப்படுத்த டிரைசைக்ளோ சோல் 75% டபிள்யூ-பி அல்லது கார்பென்டாசிம் 50% டபிள்யூ-பி 200 கிராம் தெளிக்க வேண்டும்.புப்ரோபெசின் 25-சிசி, டிரைசைக்ளோசோல் அல்லது கார்பென்டாசிம் மருந்துகள் திருவாடானை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்க திட்டத்தின் கீழ் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இந்த வாய்ப்பை விவசாயிகள் அனைவரும் பயன்படுத்தி மருந்துகளை வாங்கி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் சந்தேகங்களுக்கு களப்பணியாளர் களை அணுகலாம். அல் லது திருவாடானை வேளா ண் உதவி இயக்குனர் அலுவலகத்தை 04561-254080, 254340 என்ற எண்களில் தொடர்புகொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## <u>அரசு நிதியுதவியுடன் அடர் நடவு பருத்தி சாகுபடி</u>

சாத்தூர், : சாத்தூர் பகுதியில் மத்திய, மாநில அரசு நிதியுதவியுடன், அடர் நடவு முறையில் பருத்தியை விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். இதனை, விருதுநகர் வே ளாண்மை துணை இயக்குநர் ஆய்வு செய்தார்.தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ், அடர் நடவு முறையில் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசுகள் மானியம் வழங்குகிறது. சாத்தூர் பகுதியில் இம்முறையில் பருத்தி சாகுபடி செய்த 9 விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசு மானியத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன்படி சாத்தூர் அருகே நல்லமுத்தன்பட்டியில் அடர் நடவு முறையில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சுமார் 1 எக்டர் பரப்பளவில் செய்யப்பட்டுள்ள இந்த சாகுபடியில் வரிசைக்கு வரிசை 60 செ.மீ இடைவெளியும், செடிக்கு செடி 10 செ.மீ இடைவெளியிலும் விதைகள் நடவு செய்யப்பட்டுள்ளது. இதனால், கூடுதல் மகசூல் கிடைக்கிறது. சாகுபடி செய்யப்பட்ட நிலங்களை விருதுநகர் வேளாண்மை துணை இயக்குநர் பூவலிங்கம் ஆய்வு செய்தார்.

சாத்தூர் வட்டார வேளாண்மை துணை இயக்குநர் சக்கரவர்த்தி, வேளாண்மை அலுவலர் மகாலட்சுமி, உதவி வேளாண்மை அலுவலர்கள் பாண்டியம்மாள் பாண்டி ஆகியோர் உடனிருந்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நீர்மட்டம் 142 அடியானது; 5 ஆண்டுகளுக்கு பிறகு நிரம்பியது பாபநாசம் அணை 1,800 கன அடி உபரிநீர் வெளியேற்றம்**

5 ஆண்டுகளுக்கு பிறகு பாபநாசம் அணை நீர்மட்டம் 142 அடியை எட்டி, முழுவதுமாக நிரம்பியது. இதையடுத்து வினாடிக்கு 1,800 கன அடி தண்ணீர் தாமிரபரணி ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது.

பாபநாசம் அணை

நெல்லை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையில் காரையாறு வனப்பகுதியில் இயற்கை எழில் சூழ்ந்த இடத்தில் பாபநாசம் அணை அமைந்துள்ளது. அந்த அணையின் அருகே சேர்வலாறு அணை உள்ளது. நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களின் விவசாயத்துக்கும், 5 மாவட்டங்களின் குடிநீர் தேவைக்கும் நீர் ஆதாரமாக பாபநாசம் அணை விளங்குகிறது. பாபநாசம் அணையின் முழு கொள்ளளவு 143 அடி ஆகும். அதிகபட்சமாக 142 அடி வரை நீர் இருப்பு வைக்கப்படும். தொடர்ந்து பலத்த மழை பெய்தால் மட்டுமே பாபநாசம் அணை முழுவதுமாக நிரம்பும். சுமாரான மழை என்றால், 100 அடியை தாண்டுவதே கடினம்தான்.

5 ஆண்டுகளுக்கு பிறகு

பாபநாசம் அணை கடைசியாக 2009–ம் ஆண்டில் முழுவதுமாக நிரம்பியது. கடந்த 4 ஆண்டுகளில் மழை குறிப்பிடத்தக்க அளவு இல்லாததால், அணை நிரம்பவில்லை. 5 ஆண்டுகளுக்கு பிறகு, இம்முறை அணை நிரம்பி

இருக்கிறது. கடந்த 2 மாதங்களாக வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்ததுதான், அணை நிரம்ப முக்கிய காரணம் ஆகும். கடந்த அக்டோபர் மாதம் 15–ந் தேதி அணையின் நீர்மட்டம் சுமார் 60 அடியாக இருந்தது. கடந்த ஒன்றரை மாதத்தில் நீர்மட்டம் மேலும் 80 அடி உயர்ந்து, 142 அடியை நேற்று எட்டியது. நேற்று முன்தினம் காலையில் நீர்மட்டம் 141.30 அடியாக இருந்தது. ஒரே நாளில் மேலும் அரை அடி உயர்ந்து, நேற்று காலையில் 141.80 அடியாகி, நிரம்பும் நிலையை எட்டிப்பிடித்தது. அப்போது அணைக்கு வினாடிக்கு 1,420 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து உபரிநீரை வெளியேற்றுவது தொடர்பாக நேற்று முன்தினமே பொதுப்பணித்துறை அதிகாரிகள், பொறியாளர்கள் அணையில் முகாமிட்டு ஆலோசனை நடத்தினார்கள்.

1,800 கன அடி

அதிகாரிகள் எடுத்த முடிவின்படி, சுரங்கப்பாதை வசதியின் மூலம் உபரிநீர் சேர்வலாறு அணைக்கு திருப்பிவிடப்பட்டது. சுமார் 1,400 கன அடிநீர் பாபநாசம் அணையில் இருந்து சுரங்கப்பாதை வழியாக சேர்வலாறு அணைக்கு செல்வதாக தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே சேர்வலாறு அணையில் இருந்து மின்உற்பத்திக்காக அதிக அளவில் உபரிநீர் வெளியேற்றி வருகிறார்கள். இதனால் 150 அடியில் இருந்த சேர்வலாறு அணையின் நீர்மட்டம் நேற்று 146.5 அடியாக குறைந்தது. தற்போது பாபநாசம் அணையில் திறக்கப்பட்ட உபரிநீருடன் சேர்த்து, மொத்தம் 1,800 கன அடி தண்ணீர் தாமிரபரணி ஆற்றில் திறக்கப்பட்டு உள்ளது. சேர்வ லாறு அணையில் இருந்து வெளியேறும் இந்த தண்ணீரானது, மின் உற்பத்தி நிலையத்தில் விழுந்து, பின்னர் தாமிரபரணியை வந்தடைகிறது. சுமார் 50 கன அடி நீரில் ஒரு மெகாவாட் மின்சாரம் தயாரிக்கலாம் என்றும், 1800 கன அடி வரை தண்ணீர் திறக்கப்பட்டு இருப்பதால் வினாடிக்கு 36 மெகாவாட்

வரை மின்உற்பத்தி நடைபெறுவதாக மின்வாரிய அதிகாரிகள் கூறினார்கள். பாபநாசம், சேர்வலாறு அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக இருந்தாலும், அணை பகுதியில் நேற்று மழை குறிப்பிடும்படி இல்லை. பாபநாசம் அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் வெறும் 2 மில்லி மீட்டர் மழையே பதிவாகி இருக்கிறது.

மணிமுத்தாறு அணை

மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள மற்றொரு பிரதான அணையான, மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 102.65 அடியாக நேற்று உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 1,016 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. பாபநாசம் அணை நிரம்பியதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் விவசாய பணிகள் மும்முரமாக நடந்து வருகின்றன. நெல்லை மாவட்டத்தில் நேற்று மழை இல்லை. ஒரு மாதத்துக்கு பின்பு சுட்டெரித்த வெயிலை மக்கள் உணர்ந்தார்கள்.

## <u>பூதப்பாடி ஒழுங்குமுறைக்கூடத்தில் ரூ.58 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை</u>

அம்மாபேட்டை, பூதப்பாடி ஒழுங்குமுறைக்கூடத்தில் ரூ.58 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை ஆனது.

<u>கொப்பரை தேங்காய்</u>

அம்மாபேட்டை அருகே உள்ள பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாய விளைபொருட்கள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு விவசாயிகள் 3 ஆயிரத்து 9 தேங்காய்களை விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தனர். இதில் சிறிய தேங்காய் ஒன்று 4 ரூபாய் 50 காசுக்கும், பெரிய தேங்காய் 13 ரூபாய் 60 காசுக்கும் ஏலம் போனது. மொத்தம் 31 ஆயிரத்து 77 ரூபாய்க்கு தேங்காய் விற்பனை ஆனது.

கொப்பரை தேங்காய் 16 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது (குவிண்டால்) ரூ.5ஆயிரத்து 515 முதல் ரூ.7 ஆயிரத்து 315 வரை ஏலம் போனது. மொத்தம் 8 ஆயிரத்து 339 ரூபாய்க்கு கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது. வெள்ளை எள் 678 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது (குவிண்டால்) ரூ.8 ஆயிரத்து 29 முதல் ரூ.9 ஆயிரத்து 299 வரை ஏலம் போனது. மொத்தம் 38 லட்சத்து 32 ஆயிரத்து 620 ரூபாய்க்கு எள் விற்பனை ஆனது. நெல் 111 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் பொன்னி ரக நெல் (குவிண்டால்) ரூ.2 ஆயிரம் முதல் ரூ.2 ஆயிரத்து 161 வரை ஏலம் போனது. ஏ.டி.டி. ரக நெல் (குவிண்டால்) ரூ.1,676 முதல் ரூ.1,700 வரை ஏலம் போனது. மொத்தம் 1 லட்சத்து 46 ஆயிரத்து 447 ரூபாய்க்கு நெல் விற்பனை ஆனது.

ரூ.58 லட்சத்துக்கு விற்பனை

நிலக்கடலை 1,540 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது (குவிண்டால்) (காய்ந்தது) ரூ.3 ஆயிரத்து 600 முதல் ரூ.4 ஆயிரத்து 100 வரை ஏலம் விடப்பட்டது. நிலக்கடலை (பச்சை) (குவிண்டால்) ரூ.1,300 முதல் ரூ.1,870 வரை விற்றது. மொத்தம் 17 லட்சத்து 63 ஆயிரத்து 808 ரூபாய்க்கு விற்பனை ஆனது. இந்த ஏலத்தில் விவசாய விளைபொருட்கள் மொத்தம் ரூ.57 லட்சத்து 82 ஆயிரத்து 291–க்கு ஏலம் போனது. சத்தி கூட்டுறவு சங்கம் இதேபோல சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் மஞ்சள்– வாழைப்பழங்கள் ஏலம் நடைபெற்றது. சத்தியமங்கலம், செண்பகபுதூர், எரங்காட்டூர், வாய்க்கால்மேடு, சிக்கரசம்பாளையம், தாண்டாம்பாளையம், ராஜன்நகர், அரியப்பம்பாளையம், பண்ணாரி, அரசூர், கே.என்.பாளையம், கொடிவேரி, உள்ளிட்ட 35 கிராமங்களை சேர்ந்த விவசாயிகள்

விளைபொருட்களை விற்பனைக்கு கொண்டுவந்தனர். இதில் விரலி மஞ்சள் பாலீஸ் போட்டது (குவிண்டால்) ஒன்று ரூ.6 ஆயிரத்து 69 முதல் 6 ஆயிரத்து 759 வரை விற்பனை ஆனது. பாலீஸ் போடாதது (குவிண்டால்) ரூ.4 ஆயிரத்து 39 முதல் 5 ஆயிரத்து 384 வரையும், குண்டு மஞ்சள் பாலீஸ் போட்டது ரூ.5 ஆயிரத்து 389 முதல் 6 ஆயிரத்து 139 வரை விற்றது. மொத்தம் 25 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம் போனது. வாழைப்பழம் இதைத்தொடர்ந்து நடந்த வாழைப்பழம் ஏலத்தில் கதலி வாழைப்பழம் ஒரு கிலோ 55 ரூபாய் 10 காசுக்கும், நேந்திரம் 33 ரூபாய் 60 காசுக்கும் ஏலம் போனது. இதேபோல் ஒரு தார் செவ்வாழைப்பழம் 615 ரூபாய்க்கும், பச்சைநாடன் 370 ரூபாய்க்கும், தேன்வாழை 590 ரூபாய்க்கும், மொந்தன் 365 ரூபாய்க்கும், ரஸ்தாளி 545 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.5 லட்சத்து 70 ஆயிரத்துக்கு வாழைப்பழங்கள் விற்பனையானது. பருத்தி மொத்தம் 70 மூட்டைகள் ஏலத்துக்கு கொண்டுவரப்பட்டு இருந்தது. பருத்தி ஒரு குவிண்டால் 3 ஆயிரத்து 260 ரூபாய் முதல் 4 ஆயிரத்து 230 ரூபாய் வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.2 லட்சத்துக்கு பருத்தி விற்பனையானது. இந்த ஏலத்தில் மொத்தம் 32 லட்சத்து 70 ஆயிரத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனையானது. கோவை, அவினாசி, திருப்பூர், கோபி, சத்தியமங்கலம் ஆகிய பகுதிகளில் இருந்து வியாபாரிகள் ஏலத்தில் கலந்துகொண்டு மஞ்சள், வாழைப்பழம், பருத்திகளையும் வாங்கி சென்றார்கள்.

## <u>4 லட்சம் பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளன அமைச்சர் விஜயபாஸ்கர் தகவல்</u>

இலுப்பூர், தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளில், 4 லட்சம் பயனாளிகளுக்கு விலையில்லா வெள் ளாடுகள் வழங்கப்பட்டுள் ளன என அமைச்சர் விஜயபாஸ்கர்தெரிவித்தார்.

விலையில்லா வெள்ளாடுகள்

விரால்மலை சட்டமன்ற தொகுதி சித்தன்னவாசலில் கால்நடை பராமரிப்புத் துறை யின் சார்பில் விலையில்லா வெள்ளாடு கள் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 185 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் நிகழ்ச்சி நடை பெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் கணேஷ் தலைமை தாங்கினார். மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் பயனாளிக ளுக்கு விலையில்லா வெள் ளாடுகளை வழங்கி பேசினார். அப்போது அவர் கூறிய தாவது:-

தமிழக அரசு கால்நடை பராமரிப்புத்துறையின் கீழ் பல்வேறு திட்டங்களை அறி முகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் ஏழை, எளிய மக்களுக்கு விலையில்லா வெள்ளாடுகள் வழங்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், திருநல்லூரில் ரூ.5.14 லட்சம் மதிப்பீட்டில் தலா 4 ஆடுகள் வீதம் 39 பயனாளிகளுக்கு விலை யில்லா வெள்ளாடுகளும், புதூரில் ரூ.6.60 லட்சம் மதிப்பீட்டில் தலா 4 ஆடுகள் வீதம் 50 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடு களும், சித்தன்னவாசலில் ரூ.4.22 லட்சம் மதிப்பீட்டில் தலா 4 ஆடுகள் வீதம் 32 பயனாளிகளுக்கு விலை யில்லா வெள்ளாடுகளும், புல்வயலில் ரூ.8.44 லட்சம் மதிப்பீட்டில் தலா 4 ஆடுகள் வீதம் 64 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடு களும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றை பெறும் பயனாளிகள் இதனை நல்லமுறையில் வளர்த்து ஆடுகள் ஈனும் குட்டிகள் மூலம் வருமானத்தை பெருக்கிக் கொண்டு வாழ்வில் பொருளாதாரத்தை மேம் படுத்தி கொள்ள வேண்டும்.

விராலிமலை தனிவட்டமாக...

விராலிமலை சட்டமன்றத் தொகுதியில் உள்ள பொது மக்களின் குடிநீர்த்தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ரூ.310 கோடி மதிப்பீட்டில் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு 60 சதவீத பணிகள்

நடைபெற்று வருகிறது. மேலும், இப்பணிகள் 6 மாத காலத்திற்குள் முடிக்கப் பட்டு பொதுமக்கள் பயன் பாட்டிற்கு கொண்டு வரப் படும். இலுப்பூரை தலைமையிட மாகக் கொண்டு புதிய வருவாய் கோட்டம் உருவாக்கப்பட்டும், விராலி மலை தனி வட்டமாக உரு வாக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழகத்தில் கடந்த மூன் றாண்டுகளில் விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.506.36 கோடி செலவில் 4 லட்சம் பயனாளிகளுக்கு தலா 4 ஆடுகள் வீதம் வழங்கப்பட்டு உள்ளது. இவ்வாறு அவர் பேசினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அதிகாரி மாரி முத்து, வருவாய் கோட்டாட் சியர் பூமி, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் வி.சி. ராமையா, மதியநல்லூர் ஊராட்சி மன்றத்தலைவர் ராமசாமி, ஒன்றியக்குழு தலைவர் இளவரசிவசந்தன், ஆத்மா குழுத்தலைவர் சாம்பசிவம், நகர்மன்றத் தலைவர் ராஜசேகரன், வட்டார வளர்ச்சி அலுவலர் கள் விஜயநாதன், வீரப்பன், பேரூராட்சி தலைவர் ராஜ மன்னார், புதூர் ஊராட்சி மன்றத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## <u>சிவகங்கை மாவட்டத்தில் 645 டன் உரங்கள் இருப்பு வேளாண்மை இணை இயக்குநர் தகவல்</u>

சிவகங்கை, சிவகங்கை மாவட்ட பகுதிகளில் விவசா யத்திற்கு உரங்கள் தட்டுப் பாடின்றி கிடைக்க 645 டன் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக வேளாண்மை இணை இயக்குனர் தெரிவித் துள்ளார்.

உரங்கள்

சிவகங்கை மாவட்ட வேளாண்மை இணை இயக்கு நர் கணேசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:–

சிவகங்கை மாவடத்தில் தற் போது பெய்துள்ள மழையை பயன்படுத்தி

விவசாய பணி கள் தொடங் கப்பட்டுள்ளன. இந்த சமயத் தில் விவசாயத்திற்கு பயன் படும் உரங்கள் தட்டுப்பாடு இன்றி கிடைக்க மாவட்ட நிர்வாகம் சார்பில் தீவிர நட வடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் மாவட்டத்தில் உள்ள 125 தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அனுமதி பெற்ற தனியார் உரக் கடைகள் மூலமாக உரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப் படுகிறது. உர விற்பனையை கண்காணிக்க வட்டார அள வில் கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளது.

திடீர் ஆய்வுகள்

இது தவிர வேளாண் மைத்துறை அதிகாரிகளும் அவ்வப்போது திடீர் ஆய்வுகள் நடத்தி அரசின் நிர்ணய விலைக்கு மேல் உரங்களை விற்பனை செய்யும் கடைகள் மீது நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்த நிலையில் ஒவ்வொரு மாதமும் மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான அளவு உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு வருகின்றன. தற்போது தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் 401டன்னும் தனியார் கடைகளில் 244டன் னும் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும் தேவைப்படும் அளவில் உரங்களை பெற்றுத்தரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஆந்திராவில் இருந்து சரக்கு ரெயிலில் 1,325 டன் யூரியா உரம் தஞ்சை வந்தது

ஆந்திராவில் இருந்து சரக்கு ரெயிலில் 1,325 டன் யூரியா உரம் நேற்று தஞ்சை வந்தது. சம்பா, தாளடி சாகுபடி காவிரி டெல்டா மாவட்டங் களான தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டத்தில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல்சாகுபடி நடைபெறும். தற்போது சம்பா, தாளடி என 12 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு சாகுபடி பணிகள்

தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இதுவரை 3 லட்சத்து 23 ஆயிரம் ஏக்கரில் சம்பா, தாளடி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த பயிர்களுக்கு தேவையான உரங்கள் பல்வேறு இடங்களில் இருந்து வரவழைக்கப்பட்டு கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் காவிரி டெல்டா மாவட்டங்களில் யூரியா உரத்தட்டுப்பாடு நிலவி வருவதாக விவசாயிகளும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

1,325 டன்

இந்த நிலையில் பல்வேறு இடங்களில் இருந்து உரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு வினியோகிக்கப்பட்டு வருகின்றன. அதன்படி நேற்று முன்தினம் காரைக்கால் துறைமுகத்தில் இருந்து 1,300 டன் யூரியா உரம் தஞ்சைக்கு வரவழைக்கப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் வினியோகிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் நேற்று ஆந்திர மாநிலம் மங்களூர் அருகே உள்ள கிருஷ்ணபட்னாவில் இருந்து 1,325 டன் யூரியா உரம் 21 ரெயில் பெட்டிகளில் நேற்று தஞ்சை ரெயில் நிலையத்துக்கு வந்தது. அங்கிருந்து உரங்கள் லாரிகளில் ஏற்றி தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டன. இதில் 400 டன் யூரியா உரம் தஞ்சைக்கும் மீதமுள்ள உரம் திருவாரூர், நாகை மாவட்டத்துக்கும் கொண்டு செல்லப்பட்டன. இந்த உரங்கள் 3 மாவட்டங்களிலும் உள்ள தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலம் வினியோகிக்கப்படுகிறது.

## <u>அரிசி, உர மூட்டைகள் சரக்கு ரெயிலில் திருச்சி வந்தன</u>

ஆந்திர மாநிலம் கரீம் நகரில் இருந்து பொது வினியோகத்திட்டத்தில் மக்களுக்கு வழங்குவதற்காக 3,600 டன் புழுங்கல் அரிசி மூட்டைகள் சரக்கு ரெயிலில் நேற்று திருச்சி வந்தன. குட்ஷெட் யார்டில் ரெயிலில் இருந்து அரிசி மூட்டைகளை சுமை தூக்கும் தொழிலாளர்கள் லாரிகளில் ஏற்றி

தஞ்சை ரோட்டில் உள்ள அரசு குடோனுக்கு கொண்டு சென்றனர். இதேபோல ஆந்திர மாநிலம் மற்றும் காரைக்காலில் இருந்து சரக்கு ரெயில்கள் மூலம் தனியார் நிறுவனத்திற்கு தலா 1,320 டன் யூரியா உர மூட்டைகள் நேற்று திருச்சி வந்தன. இதனை தனியார் நிறுவனத்தினர் தங்களது குடோனுக்கு லாரிகள் மூலம் எடுத்து சென்றனர்.